அடையாள இலக்கம்:

C

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2018

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. அன்பில்லை ______________ + ______________
2. நாளெல்லாம் ______________ + ______________
3. ஆட்டுக்குட்டி ______________ + ______________
4. நீலவானம் ______________ + ______________
5. மழைக்காலம் ______________ + ______________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. கொடி + ஏற்றினோம் = ______________
2. ஆடு + பால் = ______________
3. மண் + பானை = ______________
4. உடல் + உறுப்புகள் = ______________
5. பூ + சோலை = ______________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**
(புள்ளிகள்: 5)

1) வென்றான் ______________
2) பெரியது ______________
3) மறதி ______________
4) உண்மை ______________
5) நரகம் ______________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

(புள்ளிகள்: 5)

1) மருத்துவன் ______________
2) கெட்டிக்காரன் ______________
3) மாணவன் ______________
4) குறவன் ______________
5) பிதா ______________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**குறிப்பு :** சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

(புள்ளிகள்: 10)

1) என் அம்மா தீபாவளிக்குத் தயரரித்த _______________ மிகவும் சுவையாக இருந்தது. (முருக்கு, முறுக்கு)

2) எனது கணித ஆசிரியர் நடனக் _______________ கற்றுள்ளார். (கலையையும், களையையும்)

3) தீயபழக்கங்களை ஆரம்பத்திலேயே தடுத்து _______________ வேண்டும். (நிருத்த, நிறுத்த)

4) உடற்பயிற்சி செய்வதால் எமது உடல் _______________ பெறுகிறது. (பலம், பளம்)

5) மீனவர் _______________ வீசி மீன் பிடிப்பர். (வலை, வளை)

6) _______________ தேடிக் காலையிற் பறந்து சென்ற பறவைகள் மாலையில் கூடு வந்து சேர்ந்தன. (இரை, இறை)

7) மணமகன் மணப்பெண்ணின் கழுத்தில் _______________ கட்டினான். (தாலி, தாளி)

8) தென்னை மரத்திலே தேங்காய்கள் ___________________________ தொங்குகின்றன. (குழை குழையாகத், குலை குலையாகத்)

9) என் தங்கை விளையாட்டுப் பொருள்களைப் _______________ வைத்தாள். (பறப்பி, பரப்பி)

10) அந்த வீதியில் பல ____________ காணப்பட்டன. (வழைவுகள், வளைவுகள்)

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** (புள்ளிகள்: 20)

**குறிப்பு : 5 சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்**

1. கம்பர்: ____________________

   ____________________

2. அகதிகள்: ____________________

   ____________________

3. வில்வித்தை: ____________________

   ____________________

4. நூலகம்: ____________________

   ____________________

5. பொழுதுபோக்கு: ____________________

   ____________________

6. திருக்குறள்: ____________________

   ____________________

7. பூர்வீகம்: ____________________

   ____________________

8. தாலாட்டு: ____________________

   ____________________

9. தமிழ்மொழி: ____________________

   ____________________

10. பறவை: ____________________

    ____________________

**(எ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** (புள்ளிகள்: 20)

1. பேடையைக் கண்டதும் ஆண் மயில் தன் __________________ விரித்து ஆடியது.
2. ஒரு இரவும் ஒரு ____________________________ சேர்ந்தது ஒரு நாளாகும்.
3. தமிழ் மிகவும் தொன்மையான ______________ ஒன்று.
4. தாயார் தன் மகளின் ______________________ பொட்டு வைத்தார்.
5. காயப்பட்ட என் முழங்காலில் இருந்து ______________________ வடிந்தது.
6. சிட்டுக்குருவி தன் ______________________ இரை ஊட்டியது.
7. மகாகவி பாரதியார் இயற்கையாகவே பாடல் இயற்றும் ______________________ பெற்றிருந்தார்.
8. மழை பெய்யும்பொழுது சில வேளைகளில் மின்னலுடன் ____________________ கேட்கும்.
9. யானை அதன் ______________________ மரங்களை முறிக்கும்.
10. நமது நாட்டிலே பல ______________________ ஒற்றுமையாக வாழ்கிறார்கள்.

**(ஏ) கீழே தரப்பட்ட கவிதையைப் படித்த பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.**

(புள்ளிகள்: 15)

**உடல்நலம் பேணல்**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்(கு)
இனிய வாழ்வு தந்திடுமோ?

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டு
காலன் ஓடிப் போவானே

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீஅதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா
ஏழை யேநீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா.

கவிமணி சி தேசிகவிநாயகம்பிள்ளை

**<u>கேள்விகள்:</u>**

1) இப்பாடலிற் கூறப்படும் பிரதான கருத்து என்ன? (1 புள்ளி)

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------

2) காலன் யாரது காலை வணங்குவான்? (4 புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

3) நீண்ட ஆயுள் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்? (4 புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

4) நோயின்றி வாழ்ந்தால் சந்தோசமாக வாழலாம் எனும் கவிஞர் கூறும் கருத்தை உணர்த்தும் பழமொழி தருக. (2 புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

5) பின்வரும் சொற்களுக்குப் பாடலிற் காணப்படும் ஒத்த சொற்களை எழுதுக. (4 புள்ளிகள்)

அ. இயமன் - ______________________________

ஆ. வளி - ______________________________

இ. நாள்தோறும் - ______________________________

ஈ. வணங்கி - ______________________________

**(ஐ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** (புள்ளிகள்: 15)

மலேசியாவில் வரலாற்றுப் புகழ் பெற்றுள்ள ஓரிடம் மலாக்காப் பட்டணமே ஆகும். பதினான்காம் நூற்றாண்டின் ____________________ ஒரு கிராமமாகத் தோற்றுவிக்கப்பட்டது. இக்கிராமம் அறுநூறு ஆண்டு காலப் ____________________ வரலாற்றுப் பெருமையும் உடையது.

மலாக்கா அக்காலத்தில் ஒரு மீன்பிடி கிராமமாகவும் ____________________ இருப்பிடமாகவும் இருந்தது. பரமேசுவரன் என்னும் இந்து மன்னன் ____________________ மலாக்கா என்னும் பெயரைச் சூட்டினான். அச்சமயம் மலாக்கா வணிகத்தில் ____________________ விளங்கியது. சீனா, அரேபியா, எகிப்து, யாவா, பர்மா, அலெக்சாந்தரியா, மொலுக்கசு தீவு போன்ற தொலைவான ____________________ வணிகர்கள் இங்கு வந்து வணிகம் செய்தனர்.

1511 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் மலாக்காவைக் ____________________ நூற்றுமுப்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்கள் மலாக்காவின் வளர்ச்சிக்காகப் பல விதங்களிற் பாடுபட்டனர் அவர்கள் அன்றுகட்டிய ஃபார்மோசா கோட்டை, தேவாலயம் முதலியன வரலாற்றுக்கு ____________________ இன்றும் விளங்குகின்றன. பின்னர், போர்த்துக்கீசர்களின் ஆட்சியை ____________________ கைப்பற்றினார்கள். அவர்கள் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தனர். 1795ஆம் ஆண்டு அவர்கள் காலத்தில் மலாக்கா சீரும் சிறப்பும் பெற்று ____________________ வளர்ந்தது.

| | | |
|---|---|---|
| 1. கைப்பற்றி | 2. பழைமையும் | 3. முதலில் |
| 4. சான்றாக | 5. தலைசிறந்து | 6. நாடுகளிலிருந்து |
| 7. ஆட்சி | 8. மேலோங்கி | 9. தொடக்கத்தில் |
| 10. டச்சுக்காரர்கள் | 11. இக்கிராமத்துக்கு | |
| 12. கடற்கொள்ளையர்களின் | | |